DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 5

| | | |
|---|---|---|
| Name | : | அதியமான் (Lw - 5) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 17.04.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சிங்களாந்தபுரம் காந்தி நகரில் குடியிருந்து ஓட்டுநராக வேலைசெய்து வருகிறேன். கடந்த 10.11.2024ம் தேதி காலை 07.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்தபோது போலிசார் அங்கு வந்து அங்கு நடந்த அடிதடி வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள். போலிசார் அங்கு படம் வரைந்து எழுதிக்கொண்டு என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விபரம் எழுதி இருந்தது என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் சொன்னார்கள். பார்வை மகஜரில் என்ன விபரம் எழுதி இருந்தது என்றால் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த வீடுகள் குறித்து எழுதப்பட்டிருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கும் பேபி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நடுவில் ஒரு வீடு உள்ளது குறிப்பாக தொலைவு தெரியாது. சம்பவ இடத்திற்கும் பேபி வீட்டிற்கும் இடையே எவ்வளவு தொலைவு உள்ளது என பார்வை

மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு பார்வை மகஜரில் உள்ள சங்கதிகள் தெரியாது என்றும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இனங்க காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தினேஷ் எனக்கு எவ்வாறு சொந்தம் என்றால் எனது அண்ணா ஆவார். வாதி தினேஷ் எனது அண்ணா என்பதால் அவருக்காக பரிந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**